மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண்.62/2021

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.2.

---

பெயர். – திரு.இராமசாமி
த/பெ. – திரு.கிருஷ்ணசாமி
கிராமம் – குப்பணாபுரம்
தொழில் – விவசாயம்
தாலுகா – கயத்தார்
வயது – 40.

1872–ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26–ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை.–</u>

1) நான் இந்த வழக்கில் 2ம்வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை வாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 13.08.1960ம் தேதி வாதியின் தகப்பனார் கிருஷ்ணசாமி ரெட்டியார் பெயரில் உள்ள கிரைய ஆவணம் 2 தாள்கள் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | 1984 ஆம் ஆண்டு வாதியின் தகப்பனார் கிருஷ்ணசாமி ரெட்டியார் இறந்து போனதற்கான இறப்பு குறித்த சார்பதிவாளர் மேலெழுத்து அசல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | 09.11.2010ம் தேதிய தபசில் சொத்தினைப் பொறுத்து எஸ்.எல்.ஆர்.நகல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | பிராது தபசில் சொத்திற்குரிய வாதி பெயரிலான தீர்வை ரசீதுகள் எண்ணம் 5 அசல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | 28.06.2006ம் தேதியில் பிராது தபசில் சொத்தைப்பொறுத்து 1ம்பிரதிவாதி 2ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த மோசடி கிரைய ஆவணம் சார்பதிவக நகல் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | 30.10.2014ம் தேதியில் பிராது தபசில் சொத்தைப் பொறுத்து, 2ம்பிரதிவாதி, 3ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள மோசடி கிரைய ஆவணம் சார்பதிவக நகல் வா.சா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7 | 09.03.2021ம் தேதியில் வாதி வழக்கறிஞர் பிரதிவாதிகளுக்குஅனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் அஞசலக ரசீதுடன் கூடியது வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 8 | 11.03.2021ம் தேதியில் மேற்படி வாக்கறிஞர் அறிவிப்பினை 1,2 பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளாததால் திருப்பி வந்த அஞ்சல் கவர்கள் எண்ம் 2. வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

| | |
|---|---|
| 9 | 09.02.2025ல் இறந்த கிருஷ்ணசாமியின் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 10 | 09.04.2025ம் தேதியிட்ட கிருஷ்ணசாமியின் வாரிசு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
26.02.2026.